# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆத்தூர்.

முன்னிலை : **திருமதி. D. ஜான்சிராணி, MBA., LLM.,**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**

2025–ஆம் ஆண்டு, ஜூலை திங்கள், 14–ஆம் நாள், திங்கட்கிழமை

**I.A. No. 06 of 2024 in O.S. No. 105 of 2006**
**(CNR No. TNSA13-000015-2006)**

1. A.K. ஆறுமுகம் (இறந்தவர்)
2. தனபாக்கியம்
3. சக்திவேல்
4. சங்கீதா .. மனுதாரர்கள் / வாதிகள்

எதிராக

D. சுந்தரராஜன் .. எதிர்மனுதாரர் / பிரதிவாதி

இம்மனுவின் மீதான விசாரணையானது, கடந்த 09.07.2025–ஆம் தேதியில் இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபொழுது, 1–ம் மனுதாரர் காலமாகிவிட்ட நிலையில், 2 முதல் 4 மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. V. குமரவேல் அவர்களும், எதிர்மனுதாரர் / பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. R. ரவி அவர்களும் ஆஜராகியும், இரு தரப்பு வாதம் மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்து இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

*.. 2 ...*

## உத்தரவுரை

மனுதாரர்கள் / வாதிகள் தங்களது தரப்பில் மறுப்புரை (Reply Statement) தாக்கல் செய்ய அனுமதி வேண்டி இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

2. **மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம் :** 1–ம் மனுதாரர் / வாதி அசல் வழக்கை எதிர்மனுதாரர் / பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார். அசல் வழக்கு நிலுவையில் இருக்கும்பொழுது மேற்படி 1–ம் மனுதாரர் / வாதியான A.K. ஆறுமுகம் என்பவர் கடந்த 02.08.2023 அன்று இறந்துவிட்டார்.

1–ம் மனுதாரர் / வாதியான A.K. ஆறுமுகத்தின் இறப்பிற்கு பின்னிட்டு அவரது வாரிசுகளான 2 முதல் 4 மனுதாரர்கள் / வாதிகள் தொடர்ந்து தாவா சொத்தை அனுபவம் செய்வதற்கு எதிர்மனுதாரர் / பிரதிவாதி இடையூறு செய்ததால், 2 முதல் 4 மனுதாரர்களை வழக்கில் சேர்த்து வழக்கை நடத்த அனுமதி வேண்டி மனு தாக்கல் செய்து, மேற்படி மனுவும் அனுமதிக்கப்பட்டது.

எதிர்மனுதாரர் / பிரதிவாதி, கடந்த 10.09.2023 அன்றும், 05.12.2023 அன்றும் தாவா சொத்தை 2 முதல் 4 மனுதாரர்கள் / வாதிகள் அனுபவம் செய்வதற்கு தொடந்து இடையூறு செய்து வந்ததாலும், அத்துமீறி தாவா சொத்தில் வாய்க்கால் பாத்தியம் மற்றும் தடபாத்தியம் கேட்டு மிரட்டி வருவதாலும் அசல் வழக்கை எதிர்மனுதாரருக்கு எதிராக தொடர்ந்து நடத்த வேண்டியுள்ளது. மேலும் எதிர்மனுதாரர் / பிரதிவாதி தாக்கல் செய்துள்ள கூடுதல் பதிலுரைக்கு 2 முதல் 4 மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் மறுப்புரை (Reply Statement) தாக்கல்

.. 3 ...

செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதால் மேற்படி மறுப்புரையை (Reply Statement) ஏற்றுக்கொள்ள அனுமதிக்க வேண்டி இம்மனுவை 2 முதல் 4 மனுதாரர்கள் / வாதிகள் தாக்கல் செய்துள்ளனர்.

3. **<u>எதிர்மனுதாரர் / பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:</u>** மனுவில் சொல்லியுள்ள சங்கதிகளில் எதிர்மனுதாரரால் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகளை மனுதாரர்களே நிரூபிக்க கடமைப்பட்டவர்கள். மனுதாரர்கள் பிரமாண பத்திரிக்கையில், 2–ம் பத்தியில் கூறியுள்ள சங்கதிகளில் எதிர்மனுதாரர் / பிரதிவாதி ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர ஏனைய சங்கதிகளை மனுதாரர்களே நிரூபிக்க கடமைப்பட்டவர்கள்.

அசல் வழக்கு நிலுவையில் இருக்கும்பொழுது 1–ம் மனுதாரர் / வாதியான A.K. ஆறுமுகம் என்பவர் கடந்த 02.08.2023 அன்று இறந்துவிட்டார் என்பது உண்மை. மேற்படி 1–ம் மனுதாரர், 3, 4 மனுதாரர்களின் தகப்பனார் என்பது உண்மை. மேற்படி A.K. ஆறுமுகம் இறந்த பின்னிட்டு தாவா சொத்தை அவரது வாரிசுகளான 2 முதல் 4 மனுதாரர்கள் / வாதிகள் அனுபவம் செய்வதற்கு எதிர்மனுதாரர் / பிரதிவாதி இடையூறு செய்ததால் 2 முதல் 4 மனுதாரர்களை வழக்கில் சேர்த்து வழக்கு நடத்தவேண்டி மனு தாக்கல் செய்து மேற்படி மனு அனுமதிக்கப்பட்டுள்ளது என்பதும், எதிர்மனுதாரர் கடந்த 10.09.2023 அன்றும், கடந்த 05.12.2023 அன்றும் 2 முதல் 4 மனுதாரர்கள் தாவா சொத்தை அனுபவம் செய்வதற்கு தொடர்ந்து இடையூறு செய்து, அத்துமீறி தாவா சொத்தில் வாய்க்கால் பாத்தியம் மற்றும் தடபாத்தியம் கேட்டு மிரட்டி வந்ததால் இவ்வழக்கை எதிர்மனுதாரருக்கு எதிராக தொடர்ந்து நடத்தவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்பதும் உண்மைக்கு புறம்பான சங்கதிகளாகும். மேலும் எதிர்மனுதாரர் தாக்கல்

.. 4 ...

செய்துள்ள கூடுதல் பதிலுரைக்கு மறுப்புரை (Reply Statement) தாக்கல் செய்யவேண்டிய அவசியம் உள்ளதாக 2 முதல் 4 மனுதாரர்கள் கூறுவது உண்மைக்கு புறம்பான சங்கதிகளாகும்.

கடந்த 16.03.2006 அன்று A.K. ஆறுமுகம் தாவா சொத்தை அனுபவிப்பதற்கு இடையூறு செய்ததாக எதிர்மனுதாரர் / பிரதிவாதி மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டிதான் அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார். வழக்கு நிலுவையில் இருந்த சமயத்தில் 1–ம் மனுதாரர் / வாதியான A.K. ஆறுமுகம் என்பவர் கடந்த 02.08.2023 அன்று காலமாகிவிட்டார்.

மேற்படி 1–ம் மனுதாரர் / வாதி இறந்த பிறகு எதிர்மனுதாரர் / பிரதிவாதி மீது அவரது வாரிசுகளுக்கு எவ்வித வழக்குமூலமும் ஏற்படவில்லை. மேலும் பிரமாண பத்திரிக்கையில் கூறியுள்ளதுபோல் கடந்த 10.09.2023 மற்றும் 05.12.2023 தேதிகளில் 2 முதல் 4 மனுதாரர்கள் தாவா சொத்தை அனுபவம் செய்வதற்கு தொடர்ந்து எதிர்மனுதாரர் இடையூறு செய்து வந்ததாக மனுவில் குறிப்பிட்டுள்ளது உண்மைக்கு புறம்பானதாகும்.

தற்பொழுது 2–ம் மனுதாரர் தனபாக்கியம் என்பவரும் இறந்துவிட்டார். அதனால் மனுதாரர்களுக்கு தொடர்ந்து தாவாவினை நடத்துவதற்கு எவ்வித வழக்குமூலமும் ஏற்படாததினால், அதனை தொடர்ந்து மறுப்புரை (Reply Statement) தாக்கல் செய்வதற்கு மனுதாரர்களுக்கு சட்டப்படி எவ்வித உரிமையும், முகாந்திரமும் இல்லை. எனவே மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்பட்டுள்ளது.

.. 5 ...

4. **தற்பொழுது இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்,**

*மனுதாரர்கள் / வாதிகள் கோரியுள்ள பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கதா?*

5. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

6. **<u>தீர்வு :</u>**

1) இந்த மனுவானது 1–ம் மனுதாரர் / வாதி A.K.ஆறுமுகம் என்பவர் கடந்த 02.08.2023 தேதியன்று இறந்துவிட்டதால், அவருடைய வாரிசுகளான மனுதாரர்கள் / 2 முதல் 4 வாதிகள் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டு, அதனடிப்படையில் எதிர்மனுதாரர் / பிரதிவாதி தாக்கல் செய்த கூடுதல் பதிலுரைக்கு பதில் எதிருரை தாக்கல் செய்யவேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) 1–ம் மனுதாரர் / வாதி A.K.ஆறுமுகம் இறந்த பின்னிட்டு அவரது வாரிசுகள் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ள நிலையில், அவர்களது பதில் எதிருரையை தாக்கல் செய்ய அவர்களுக்கு வாய்ப்பளிப்பது அவசியமானதாகும். எனவே, நீதியின் நலன் கருதி இம்மனு அனுமதிக்கப்படுகிறது.

7. முடிவாக, மனுதாரர்கள் / வாதிகள் தாக்கல் செய்துள்ள இம்மனுவை இந்நீதிமன்றம் அனுமதித்து உத்தரவிடுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவுரையானது என்னால் சுருக்கெழுத்துத்–தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் வரிவடிவில் எடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு

*.. 6 ...*

செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2025–ஆம் ஆண்டு, ஜூலை திங்கள், 14–ம் நாள், திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**ஒம்/– D. ஜான்சிராணி**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**ஆத்தூர்.**

<u>மனுதாரர்கள் / வாதிகள் தரப்பு சாட்சிகள் :</u> இல்லை
<u>எதிர்மனுதாரர் / பிரதிவாதி தரப்பு சாட்சிகள் :</u> இல்லை

<u>மனுதாரர்கள் / வாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :</u> இல்லை
<u>எதிர்மனுதாரர் / பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள் :</u> இல்லை

<u>நீதிமன்ற சாட்சிகள் </u>: இல்லை
<u>நீதிமன்ற சான்றாவணங்கள்</u> : இல்லை

**ஒம்/– D. ஜான்சிராணி**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**ஆத்தூர்.**

**மு.மா.உ.நீ., ஆத்தூர்.**

**இ.ம.வ. எண் 6/2024**

**---------------**

**அ.வ. எண் 105/2006**

அசல் / வரைவு உத்தரவுரை

நாள் : 14.07.2025

இ.ம.வ. எண் 06/2024 **in** அ.வ.எண்.105/2006